අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
**OFFICE ON MISSING PERSONS**

**ஊடக வெளியீடு** **10 பெப்ரவரி 2020**

**<u>இடைக்கால அறிக்கை வழங்கல் ஆரம்பம்.</u>**

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது காணப்படாமைக்கான சான்றிதழை பெறுவதற்காக காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களிற்கு இடைக்கால அறிக்கையை வழங்க ஆரம்பித்துள்ளது.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2016ம் ஆண்டின் 14ம் இலக்க (தாபித்தலும் நிர்வகித்தலும் மற்றும் கடமைகளைப் பொறுப்பேற்றலும்) சட்டத்தின் (காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டம்) 13(1)(அ)(i) இன் பிரகாரம் காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களிற்கு இடைக்கால அறிக்கையை வழங்குவதற்கு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றது. 2016ம் ஆண்டின் 16ம் இலக்க இறப்புகளின் பதிவுகள் (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 8எ இல் கட்டமைக்கப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகளின் கீழ் பதிவாளர் நாயகத்திடமிருந்து காணப்படாமைக்கான சான்றிதழினைப் பெறுவதற்கு பயன்படுத்த முடியும்.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பணிப்பாணைக்கமைய (1) வடக்கு கிழக்கில் இடம்பெற்ற மோதலின் விளைவாக அல்லது யுத்தச்செயலில் காணாமற்போனவர் என அறிக்கையிடப்பட்டுள்ள ஆயுதப் படையினர் அல்லது காவல்துறையினர் (2) அரசியல் அமைதிக்குலைவு அல்லது குடியியல் குழப்பங்கள் (3)அல்லது வலிந்து காணாமற்போகச் செய்தலின் விளைவுகளினால் காணாமற்போனவர்களிற்கு, காணப்படாமைக்கான சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்கான இடைக்கால அறிக்கையினை வழங்கமுடியும். இவ்விசேட ஒழுங்குமுறையானது காணப்படாமைக்கான சான்றிதழினை பெறுவதற்கான நியமங்களிற்கான ஒரு எளிய மாற்றாக காணப்படுகின்றது.

காணப்படாமைக்கான சான்றிதழானது ஒரு நபரினது காணாமற்போனதாக அறிக்கையிடப்பட்ட நிலையை உறுதிப்படுத்துவதுடன் ஏதேனும் சமூக அல்லது நலன்புரி திட்டங ்களின் கீழாக உதவிகளிற்காக விண்ணப்பிப்பதற்கும் மாவட்ட நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் காணாமற்போன நபரிற்குரித்தான சொத்துக்கள் மற்றும் ஆதனங்களை தற்காலிகமாக பராமரித்தல் மற்றும் காணாமற்போன ஆளினது பிள்ளைகளிற்கான தற்காலிக பாதுகாவலராயிருத்தலிற்கும் அதிகாரசபை மற்றும் நீதிமன்றங்களிற்கு முன்பாக காணாமற்போன ஆளினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்குமென அதனை பயன்படுத்த முடியும். காணப்படாமைக்கான சான்றிதழ் என்பது மரணச் சான்றிதழிலிருந்து வேறுபடும் ஒரு சட்ட ஆவணமாகும்.

இடைக்கால அறிக்கையை பெற விரும்பும் உறவினர்கள் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதான விதந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை காணாமற்போன ஆட்களிற்கான அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவமானது உறுதிப்படுத்தும் ஆவணங்களை கொண்டிருக்க வேண்டும். ஆவணங்களை மதிப்பிடுவதற்கும் வாய்மூல சாட்சியங்களை கருத்திற்கொள்வதுமான ஒரு விசாரணையை தொடர்ந்து இடைக்கால அறிக்கை வழங்கப்படும்.